**மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேர்வு வழிகாட்டுதல்கள்**

**முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு அரையாண்டு இறுதித் தேர்வு – அரையாண்டு 2 – 2020/2021**

**கலைப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்** தேர்வு

தேர்வுக்கு முன்

- அனைத்து 1ம் மற்றும் 2ம் ஆண்டு மாற்றுத்திறனாளி மாணவர்களும் நிகழ்நிலையில் தேர்வு எழுத வேண்டும்.
- அனைத்து 1ம் மற்றும் 2ம் ஆண்டு ஆண்டு மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தங்கள் விடைத்தாள்களை சமர்ப்பிக்க ஒரு வாரம் அவகாசம் வழங்கப்படும். உதாரணமாக, உங்களுக்கு 21 மே 2022 அன்று தேர்வு நடாத்தப்பட்டால், 28 மே 2022 க்கு முன் ஏதாவது ஒரு நாளில் அதைச் சமர்ப்பிக்கவேண்டும்.

தேர்வின் போது

- மாணவர்கள் தங்கள் சேர்க்கை அட்டையை SIS கணக்கிலிருந்து பதிவிறக்கம் செய்து, அதை மென்நகல் மற்றும் கடினநகலாக சேமித்துவைத்திருக்க வேண்டும்.
- அனைத்து 1ம் மற்றும் 2ம் ஆண்டு மாற்றுத்திறனாளி மாணவர்கள் தங்கள் விடைத்தாள்களை சமர்ப்பிக்க ஒரு வாரம் அவகாசம் வழங்கப்படும். இந்த வாரத்திற்குள் அவர்கள் தங்கள் விடைத்தாள்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது:
  - 1ம் ஆண்டு – exam1@arts.cmb.ac.lk
  - 2ம் ஆண்டு – exam2@arts.cmb.ac.lk
- 1ம் மற்றும் 2ம் ஆண்டு மாணவர்களுக்கு, ஒரு நாளைக்கு இரு அமர்வுகளாக (காலை மற்றும் மாலை அமர்வுகள்) தேர்வுகள் நடாத்தப்படும்.
  - காலை அமர்வு: காலை 6.00 முதல் 10.00 வரை
  - பிற்பகல் அமர்வு: பி.ப 2.00 மணி முதல் பி.ப 6.00 மணி வரை
- வினாத்தாள்களை காலை அமர்வுக்காக காலை 5.45 மணி முதலும், பிற்பகல் அமர்வுக்காக பிற்பகல் 1.45 மணி முதலும் LMS இலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.
- கையால் எழுதுவதற்குப் பதிலாக விடைகளைத் தட்டச்சு செய்ய விரும்பும் மாணவர்கள் அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.
- மாணவர்கள் தங்கள் பதில்களை எழுத பிரெய்ல் ரைட்டர்/ஸ்லேட்டைப் (braille writer/slate) பயன்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். அவர்கள் தேர்வுகளில் எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் இன்னொருவரிடமிருந்து உதவி பெற வேண்டும்.

விடைத்தாள்களை சமர்ப்பித்தல்

- மாணவர்கள் தங்களின் விடைத்தாள்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அவர்களின் பாடக் குறியீடு மற்றும் சுட்டெண் என்பவற்றை மின்னஞ்சலின் தலைப்பு வரியில் குறிப்பிட்டு மின்னஞ்சல் செய்ய வேண்டும்.
  - 1ம் ஆண்டு – exam1@arts.cmb.ac.lk
  - 2ம் ஆண்டு – exam2@arts.cmb.ac.lk
- நீங்கள் விடைத்தாள்களை மின்னஞ்சலில் அனுப்பும்போது, பின்வரும் வடிவமைப்பில் தலைப்பு வரியில் விவரங்களைச் செருக வேண்டும் - [பாட குறியீடு] [சுட்டெண்] [கூடுதல் நேரம்].

உதாரணமாக: INR 1111 A12345 கூடுதல் நேரம்

- மாணவர்கள் தங்களுடைய விடைத்தாள் நகலுடன் தங்கள் அனுமதி அட்டையின் நகலை பதிவேற்றவோ/மின்னஞ்சல மூலம் அனுப்பவோ வேண்டும். பதிவேற்றம் செய்யப்பட்ட/மின்னஞ்சலில் அனுப்பப்பட்ட அனுமதி அட்டையானது, சம்பந்தப்பட்ட பாடப்பிரிவுடன் தொடர்புடைய ஒவ்வொரு கூண்டிலும் பரீட்சாத்தியின் கையொப்பத்தை தெளிவாகக் கொண்டிருக்கவேண்டும்.
- அனைத்து மாற்றுத்திறனாளி மாணவர்களும் LMS இல் கொடுக்கப்பட்ட இணைப்பு 1 இல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரகடனப்/உறுதிப் படிவம்/பொது முகப்புப் பக்கத்தை நிரப்பி, விடைத்தாள்களுடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும்.

**பின்னிணைப்பு I**

**மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கானப் பிரகடனப் படிவம்**

**முதலாம்/இரண்டாம் வருட இளங்கலைமாணிப் பரீட்சை**

**இரண்டாம் அரையாண்டு - 2020/2021**

**கலைப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்**

பாடத் தலைப்பு -

பாடக் குறியீடு –

மாணவரின் சுட்டெண் –

உதவியாளரின் பெயர்-

உதவியாளரின் தே.அ.அ.இல.

| வினா இலக்கம் | சொற்களின்/பக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

விடைத்தாளிலுள்ள மொத்தப் பக்கங்களின் எண்ணிக்கை -

சமர்ப்பித்த திகதி –

**மாணவரின் உறுதிச்சான்று**

சரியான முறையில் சான்றாதாரங்கள் காட்டப்பட்டவை (மேற்கோள்கள்) தவிர, இக்கணிப்பீடு எனது சொந்தப் படைப்பு என நான் உறுதிப்படுத்துகின்றேன். மற்றொருவரின் படைப்பினை எனது சொந்தப் படைப்பாக சமர்ப்பிப்பது ஒரு பரீட்சைக் குற்றமாகக் கருதப்படும் என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

…………………………………………..

கையொப்பம்

**உதவி வழங்குனரின் உறுதிச்சான்று**

இக்கணிப்பீட்டில் உள்ள விடைகள் மாணவனின் (சுட்டெண்) சொந்த எண்ணங்கள் / கருத்துக்கள் என நான் உறுதிசெய்கிறேன். வினாப்பத்திரத்தை வாசிப்பற்கும், மாணவனின் பதில்களை எழுத்துப்பூர்வமாகப் பதிவுசெய்வதற்கும் மாத்திரமே நான் உதவி வழங்கியுள்ளேன் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………..

கையொப்பம்